ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2194/54 - 2020 සැප්තැම්බර් මස 23 වැනි බදාදා - 2020.09.23

2194/54 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம்

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நாமல் ராஜபக்ஷ (பா. உ.),**
இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2020, ஓகத்து 31.

**ஒழுங்குவிதிகள்**

*1986 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதிய 385/7A ஆம் இலக்க, தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளின் வாயிலாக, திருத்தப்பட்ட 1974 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிய 130 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1974 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட்டுக்களில் பங்குபற்றுவோரை நிர்வாகம் செய்யும் ஒழுங்குவிதிகள் கீழ்வருமாறு இவ்வண்ணம் திருத்தம் செய்யப்படுகின்றது.*

1. 6அ (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) ஆகிய ஒழுங்குவிதிகளில் "தெரிவுக் குழு" எனும் பதத்திற்குப் பதிலாக "தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழு" என்னும் பதம் பிரதியிடப்படுதல் வேண்டும்.

1A - G 32978 — 25 (2020/09)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. 6 ஆவது ஒழுங்குவிதியுடன் கீழ்க்காட்டப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைச் சேர்ப்பதன் வாயிலாக,

6 (உ)

சகல தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் தெரிவுக் குழுக்களை நியமித்தல் சம்பந்தமாக பரிந்துரைகளை முன்வைக்கும் அதிகாரம் தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவினால் மாத்திரம் இடம்பெற வேண்டியதுடன் தெரிவுப் போட்டிகளை நடாத்தும் தினங்கள், நிலையங்கள், ஏற்புடைய விபரங்கள் மற்றும் தெரிவு நியதிகள் தொடர்பான தகவல்கள் 14 நாட்களுக்கு முன்பதாக விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அறிவித்தல் வேண்டும். அச்சகல பிரதிகளும் எழுத்து மூலமாக அன்றைய தினமே தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் தெரிவுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் தலைவர்/செயலாளர் மற்றும் பயிற்றுவிப்பாளர் என்போரின் விருப்பத்தின் அடிப்படையில் நடாத்தப்பட்ட தெரிவுப் போட்டிகள் மற்றும் தெரிவுகள் என்பனவற்றை இரத்துச் செய்யும் அதிகாரம் தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்கு உள்ளது.

6 (ஊ)

சகல தேசிய விளையாட்டுச் சங்கங்களினாலும்/சம்மேளனங்களினாலும் தெரிவுப் போட்டிகளை நடாத்துவதற்கு 28 நாட்களுக்கு முன்பதாக தெரிவு நியதிகளை தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்து முன்கூட்டிய அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் தெரிவு நியதிகளை தமது உத்தியோகபூர்வ இணையத் தளத்திலும் விளையாட்டு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் இணையத்தளத்திலும் பிரசுரித்தல் வேண்டும். அவ்வாறே தெரிவுப் போட்டிகளின் முடிவில் தெரிவுப் போட்டிப் பெறுபேறுகளையும் தமது உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பிரசுரித்தல் வேண்டும் என்பதுடன் தெரிவுசெய்து கொள்ளப்படும் விளையாட்டு வீர வீராங்கனைகளின் சரியான பெயர்ப்பட்டியலை தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவின் பரிந்துரைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இப்போட்டிப் பெறுபேறுகள் தொடர்பாக ஆட்சேபனைகள் யாதும் இருப்பின் அவ் ஆட்சேபனைகளை நேரடியாகவே தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும். ஆட்சேபனைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் உறுதிப்படுத்தப்படும் போட்டிப் பெறுபேற்றுப் பெயர்ப்பட்டியல் சகல அவசியமான தகவல்களுடன் அன்றைய தினமே தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களில் பிரசுரித்தல் வேண்டும்.

6 (எ)

தெரிவுப் போட்டிச் சோதனைகளின் (Selection Trials) பொருட்டு விளையாட்டு அமைச்சின் ஏற்புடைய தேசிய விளையாட்டிற்குப் பொறுப்புடைய செயற்றிட்ட உத்தியோகத்தரை பங்குபற்றச் செய்து கொள்ள வேண்டியதுடன் அது தொடர்பாகவும் தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்கு அறிவித்தல் வேண்டும்.

6 (ஏ)

தெரிவுப் போட்டிச் சோதனைகளின் முடிவில் அன்றைய தினம் அல்லது அடுத்த நாள் எழுத்துமூலமாக தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்கு பின்வரும் தகவல்களை வழங்குதல் வேண்டும் :

(அ) தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் தலைவர் அல்லது செயலாளரினால் சான்றுப்படுத்தப்பட்டு தெரிவுப் போட்டிகள் தொடர்பாகப் பங்குபற்றிய தெரிவுக்குழு உறுப்பினர்களின் வரவுக் கையொப்பப் பெயர்ப்பட்டியல்.

(ஆ) தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் தெரிவுக்குழு உறுப்பினர்களின் கையொப்பங்களைக் கொண்ட தெரிவுப் போட்டிகள் தொடர்பாகப் பங்குபற்றிய சகல விளையாட்டு வீர வீராங்கனைகளினதும் பெயர்ப்பட்டியல்.

(இ) தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் தெரிவுக் குழுவினால் சான்றுப்படுத்திய சகல விளையாட்டு வீர வீராங்கனைகளின் தெரிவுகள் நிகழ்த்தப்பட்ட விதம் மற்றும் அவர்களுக்குப் புள்ளிகள் வழங்கப்பட்ட விதம் பற்றிய புள்ளிப்பதிவுப் பத்திரம்.

(ஈ) தெரிவு செய்துகொள்ளப்பட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளின் நிகழ்ச்சிகள், நிலையங்கள் மற்றும் மேலதிக விளையாட்டு வீர வீராங்கனைகளும் உள்ளடங்கலாக அவர்களின் சரியான பெயர்ப்பட்டியல்.

*6 (ஐ)*

தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் தெரிவுப் போட்டிகளின் முடிவில் தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்குக் கிடைக்கப்பெறும் சகல மேன்முறையீடுகள்/ முறையீடுகள் சம்பந்தமாக ஆய்வுகளை/ விசாரணைகளை மேற்கொள்ளும் அல்லது பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும் அதிகாரம் தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்கு உள்ளது.

*6 (ஒ)*

சகல தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் நிறைவேற்றுக் குழுக்களின் உறுப்புரிமை மாற்றங்கள் தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்படல் வேண்டும்.

*6 (ஓ)*

தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவினால் பரிந்துரை செய்யப்படும் ஏற்புடைய தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/ சம்மேளனங்களின் தெரிவுக் குழுக்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் போது பிரதியொன்றினை விளையாட்டு அமைச்சினால் தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

*6 (ஔ)*

தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவினால் சகல தேசிய குழாம்களதும் விளையாட்டு வீர வீராங்கனைகளின் தகவல்கள் அடங்கிய தகவல் களஞ்சியமொன்று தயாரிக்கப்பட்டு இற்றைப்படுத்தி பராமரித்துச் செல்லப்படுதல் வேண்டும். அது தொடர்பாக தேசிய விளையாட்டுச் சங்கங்களில்/சம்மேளனங்களில் குழாம்களில் நிலைப்படுத்தப்பட்டுள்ள சகல விளையாட்டு வீர வீராங்கனைகளின் ஆற்றுகைகள் மற்றும் சுயவிபரத் தகவல்கள் தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தேசிய குழாம்கள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் புதிய விளையாட்டு வீர வீராங்கனைகளைச் சேர்த்தல்/நீக்குதல் தொடர்பான தகவல்களை தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்கு வழங்குதல் வேண்டும்.

*6 (ண)*

தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு முன்னர் எந்தவொரு சர்வதேச போட்டித் தொடர் தொடர்பாக பெயர் முன்மொழிவினை வழங்கக் கூடாது என்பதுடன் பயிற்றுவிப்பாளர்கள்/முகாமையாளர்கள்/உதவிப் பயிற்றுவிப்பாளர்கள்/விளையாட்டுச் செயன்முறைப் பயிற்றுநர்கள்/மசாஜ் செய்வோர் அச் சர்வதேச போட்டித் தொடரின் பொருட்டு பரிந்துரை செய்யப்படும் போது உரிய முறைமை ஒன்றினை தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்கள் கடைப்பிடிக்க வேண்டியதுடன் அதில் கீழ்வரும் நியதிகளின் அடிப்படையில் தயாரித்து தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவின் இணக்கத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(அ) இதுவரையில் விளையாட்டுத் துறைக்கு வழங்கியுள்ள பங்களிப்புக்கள்
(ஆ) விளையாட்டுத் துறையில் அவர்களது தற்போதைய செயற்படுதன்மை
(இ) ஏற்புடைய விளையாட்டு தொடர்பான அறிவு, விளக்கம் மற்றும் அனுபவங்கள்
(ஈ) விளையாட்டு வீரனாக/பயிற்றுவிப்பாளராக வெளிக்காட்டியுள்ள ஆற்றுகைகள்.

*10 - 338*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.